முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2023 யூலை

## (103) பொருளியல்

(Economics)

2023-08-26
பிற்பகல்
[2.00 – 5.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***வரைபுத்தாள்*** *வழங்கப்படும்.*
  (7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றுள் தொழில் முயற்சியாண்மைக்கான வெகுமதியாக (reward) அமைவது எது?

(1) வட்டி. (2) வாடகை. (3) இலாபம். (4) கூலி.

**1.2** கீழ்வருவனவற்றுள் சமபயன் வளையி தொடர்பான சரியான கூற்று எது?

(1) இரண்டு சமபயன் வளையிகள் ஒன்றையொன்று இடைவெட்டும்.

(2) இது வலமிருந்து இடமாக மேல்நோக்கிச் சாய்கிறது.

(3) இது ஒரு நபருக்கு சமமான திருப்தியை அளிக்கும் இரண்டு பொருள்களின் வெவ்வேறு கலவை ஆகும்.

(4) இது ஒரு பண்டத்தின் சந்தைச் சமநிலையை அடையாளங் காணப் பயன்படுகிறது.

**1.3** பண்டங்கள் **A** மற்றும் **B** இற்கிடையிலான கேள்வியின் குறுக்கு நெகிழ்ச்சியினது குணகம் (coefficient) நேர்ப் பெறுமானமாக இருப்பின், அவ்விரண்டு பொருள்களும்:

(1) பிரதியீட்டுப் பொருள்களாக இருக்கும். (2) சாதாரண பொருள்களாக இருக்கும்.

(3) நிரப்புப் பொருள்களாக இருக்கும். (4) தரந்தாழ்ந்த பொருள்களாக இருக்கும்.

**1.4** பண்டம் **X** இன் விலை ரூபா 100/- இலிருந்து ரூபா 120/- இற்கு அதிகரிக்கும்போது, அந்தப் பண்டத்திற்கான வழங்கல் கணியம் 1,000 இலிருந்து 1,100 ஆக அதிகரிக்கிறது. வழங்கலின் விலை நெகிழ்ச்சியின் தன்மையானது:

(1) நெகிழ்ச்சித்தன்மையுடையது. (2) நெகிழ்ச்சித்தன்மையற்றது.

(3) அலகுசார் நெகிழ்ச்சித்தன்மையுடையது. (4) பூரண நெகிழ்ச்சித்தன்மையற்றது.

**1.5** 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைக்கு இணங்க, 2022 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம்:

(1) 2.3 %. (2) 1.5 %. (3) - 4.6 %. (4) - 7.8 %.

**1.6** கீழ்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வு:

(1) வேலை (employment) வீதத்தின் அதிகரிப்பு.

(2) முதலீட்டின் அதிகரிப்பு.

(3) தற்போதைய நுகர்வு மட்டத்தின் அதிகரிப்பு.

(4) வாழ்க்கைத் தரத்தின் அதிகரிப்பு.

**1.7** சொந்தப் பண்டத்தின் விலை தவிர்ந்த, பண்டமொன்றின் வழங்கலில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஏதாவதொரு காரணியில் ஏற்படும் மாற்றத்தின் ஒரு விளைவாக வழங்கல் வளையியானது வலப்புறமாக நகர்வது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) வழங்கலின் ஒடுங்கல். (2) வழங்கலின் விரிவாக்கம்.

(3) வழங்கலின் வீழ்ச்சி. (4) வழங்கலின் அதிகரிப்பு.

**1.8** கீழ்வருவனவற்றுள் நிறை போட்டிச் சந்தையிலுள்ள நிறுவனமொன்று தொடர்பில் சரியான கூற்று:

(1) இது நீண்ட கால ஓட்டத்தில் சாதாரண இலாபத்தை உருவாக்குகிறது.

(2) இது சந்தையில் உள்ள விலையைத் தீர்மானிக்க முடியும்.

(3) நெருக்கமான பிரதியீடுகள் இல்லை.

(4) நிறுவனத்தின் உற்பத்திக் காரணிகளை தொழிற்றுறையிலுள்ள பிறிதொரு நிறுவனத்திற்கு இலகுவில் நகர்த்த முடியாது.

**1.9** கீழ்வருவனவற்றுள் பணத்தின் ஒரு தொழிற்பாடாக **அமையாதது** எது?

(1) பெறுமதியின் திரட்டு. (2) பெறுமதியின் ஒரு அளவீடு.

(3) சார்புரீதியான அரிதானதன்மை. (4) பரிமாற்ற ஊடகம்.

**1.10** ஒரு வணிகத்தின் முகாமையாளர் அவரது வணிகம் தொடர்பான கீழ்வரும் கிரயங்களை இனங் கண்டுள்ளார்:

| | **ரூபா ('000)** |
|---|---|
| செலுத்திய கூலி | 1,000 |
| மூலப்பொருள் கொள்வனவு | 2,500 |
| பொருளாதாரத் தேய்மானம் | 500 |
| கைவிடப்பட்ட வட்டி வருமானம் | 300 |

மொத்த நேர் கிரயமும் மொத்த நேரில் கிரயமும் முறையே (*ரூபா '000 இல்*):

(1) 2,500 மற்றும் 500. (2) 3,500 மற்றும் 800.

(3) 1,300 மற்றும் 2,500. (4) 3,500 மற்றும் 1,500.

*இல.* ***1.11*** *மற்றும்* ***1.12*** *ஆகிய வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** தொழில் (employment) என்பது …………….. *(நுண் / பேரின)* பொருளாதாரத்தின் ஒரு கூறு (component) ஆகும்.

**1.12** நுகர்வோர் வருமானத்தில் ஏற்படும் குறைவு என்பது கேள்வி வளையியை …………….. *(வலப் புறமாக / இடப் புறமாக)* நகர்த்துவதற்கான ஒரு காரணி ஆகும்.

*கீழே* ***1.13*** *மற்றும்* ***1.14*** *இல் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.13** உள்ளீடுகளின் விகிதாசார அதிகரிப்பை விட வெளியீட்டின் விகிதாசார அதிகரிப்பு குறைவாக இருக்கும்போது, அளவுத்திட்ட விளைவு அதிகரிக்கும்.

**1.14** எல்லைக் கிரயம் என்பது ஒரு மேலதிக அலகு உற்பத்தியின் விளைவாக ஏற்படும் மொத்தக் கிரயத்திற்கான ஒரு சேர்ப்பனவாகும்.

**1.15** *தொடக்கம்* **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.15** பொருளாதாரப் பொருள்களின் இரண்டு (02) பண்புகளைக் (characteristics) குறிப்பிடுக.

**1.16** சிலருரிமை சந்தையொன்றின் இரண்டு (02) பண்புகளைக் குறிப்பிடுக.

**1.17** ஒரு நாட்டின் பண வழங்கலைப் பாதிக்கின்ற இரண்டு (02) காரணிகளைக் குறிப்பிடுக.

**1.18** "குறுகிய பண நிரம்பல் ($M_1$)" மற்றும் "விரிந்த பண நிரம்பல் ($M_2$)" ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.19** விலைசார் கேள்வி நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் இரண்டு (02) காரணிகளை இனங்காண்க.

**1.20** குறுங்கால ஓட்டத்திலுள்ள நிறை போட்டியின் கீழ் நிறுவனம் ஒன்றினால் சமநிலையை எவ்வாறு அடைந்து கொள்ளலாம் என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் ''சந்தைப் பொருளாதார முறைமை'' இனாலும் ''திட்டமிடப்பட்ட பொருளாதார முறைமை'' இனாலும் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) ஒரு பொருளாதார வளம் என்ற ரீதியில் காணியின் இரண்டு (02) பண்புகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) பொருளியல் என்பது ஒரு சமூக விஞ்ஞானமாகக் ஏன் கருதப்படுகிறது என்பதற்கான காரணத்தை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

(a) பண்டமொன்று தொடர்பான கீழ்வரும் கேள்விச் ($Q_d$) சமன்பாட்டையும் நிரம்பல் ($Q_s$) சமன்பாட்டையும் கருதுக:

$$Qd = 3{,}300 - 8p$$

$$Qs = -1{,}500 + 4p$$

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(i) சமநிலை விலை மற்றும் கணியத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(ii) உற்பத்தியாளர் மிகையை **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(b) விவசாய உற்பத்திப் பொருள் ஒன்றின் மீது உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கத்தினால் அலகு மானியம் (unit subsidy) வழங்கப்படுவதால் ஏற்படும் விளைவுகளை வரைபொன்றின் உதவியுடன் **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 04

(a) இலங்கையின் தற்போதைய பணவீக்க நிலைமைக்கான இரண்டு (02) காரணங்களை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) இலங்கையின் தற்போதைய பணவீக்க நிலைமையை குறைப்பதற்கான இரண்டு (02) பரிகாரங்களை (remedies) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) இலங்கை வணிகங்கள் மீதான நாணயக் கொள்கையின் இரண்டு (02) தாக்கங்களை (implications) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) சென்மதி நிலுவைக் கூற்றின் நிதிக் கணக்கில் உள்ளடக்கப்படும் இரண்டு (02) உருப்படிகளைக் (items) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) பாதுகாப்புவாதத்திற்கு எதிராகவும் ஆதரவாகவும் இவ்விரண்டு (02) வாதங்களை (arguments) **அடையாளங்காண்க.** (04 புள்ளிகள்)

(c) அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயின் பெறுமதியை மதிப்பிறக்கம் செய்வதால் ஏற்படக்கூடிய இரண்டு (02) பொருளாதார விளைவுகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

# பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

(A) வணிகச் சுழற்சியிலுள்ள வெவ்வேறு கட்டங்களையும் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(B) ஒரு வருட காலப்பகுதிக்கான பொருளாதாரம் ஒன்றின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

| | **ரூபா மில்லியன்** |
|---|---|
| ஊழியர்களின் நட்டஈடு | 4,200 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 3,600 |
| கலப்பு வருமானம் | 1,800 |
| பிற வரிகள் கழித்த உற்பத்தி மீதான மானியங்கள் | 600 |
| நிகர வெளிநாட்டு முதன்மை வருமானம் | 300 |
| உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் மீதான நிகர வரிகள் | 700 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

வருமான அணுகுமுறையைப் பயன்படுத்தி, கீழ்வருவனவற்றைக் **கணிப்பிடுக**:

(a) மொத்த பெறுமதி சேர்ப்பு (GVA) – அடிப்படை விலையில். (05 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில். (02 புள்ளிகள்)

(c) மொத்தத் தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில். (02 புள்ளிகள்)

(C) பொருளாதாரச் செயன்முறைக்குப் பங்களிப்புச் செய்கின்ற பேரினப் பொருளாதாரத்தின் மூன்று (03) பிரதான துறைகளை **அடையாளங்காண்க.** (03 புள்ளிகள்)

(D) "ஒடுங்கலான நிதிக் கொள்கை (Contractionary Fiscal Policy)" மற்றும் "விரிவான நிதிக் கொள்கை (Expansionary Fiscal Policy)" ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# <u>செயல் வினைச்சொல் செவ்வை நிரல்</u>

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |